தென்மொழி

இந்தியராய் நொடிகின்றோமே!

போரென்ற பெயராலே கொடியவர்செய்
  வேட்டையினால் புலம்பெயர்ந்து
நீர்வழிந்த கண்ணோடும் நெடும்பசியின்
  வயிற்றோடும் பெருமூச்சோடும்
சோர்வுற்று வருகின்ற தாய்மாரைச்
  சிறுவர்களை வரவொட்டா(து)
ஊர்சுற்றி விரட்டுகின்ற உலுத்தரிடை
  இந்தியராய் உழல்கின்றோமே!

நிலைகுலந்து வாழ்விழந்து தமிழ்நாட்டைப்
  பார்த்திங்கே வெறுங்கையோடு
அலைகடலைக் கடந்துவிட்டால் அடைக்கலம்பெற்(று)
  உய்யலாம் எனவிழைந்து
கொலைமக்கள் கூர்விழிக்குத் தப்பிவரும்
  குற்றுயிரார் தம்மையெல்லாம்
தலைகாட்ட வொட்டாமல் தடுக்கின்ற
  இந்தியராய்த் தாழ்கின்றோமே!

வந்தவர்கள் பற்பலரை வரவேற்று
  விருந்தோம்பி வாழ்வளித்த
செந்தமிழப் பெருமக்கள் மாற்றார் செய்
  படுகொலைக்குத் தப்பித்தங்கள்
சொந்தயினம் வாழ்நிலத்தில் புகலிடத்துக்(கு)
  அங்காந்து மனம்வெதும்பி
நொந்தழுது வரும்போது வழியடைக்கும்
  இந்தியராய் நொடிகின்றோமே!

– இறை

சுவடி 27
ஓலை 12

விலை
உருபா : 4.00

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி. 202௬ : துலாம்   1995 நவம்பர்



படவிளக்கம் :-

க. விலங்கொடிக்கும் மறவன் தோன்றும் நுழைவாயில்
உ. அடக்கமேடை
ங. தென்மொழி அரிமா
ச. தென்மொழிக் களிறு
ரு. கல்வெட்டுப் பாறைத் தூண்கள்
ச. வழிநடை
எ. அரங்க மண்டபம்
அ. மாடியில்..... நூலகமும் காட்சியகமும்
க. அரங்க நுழைவாயில்

தொடர்புக்கு :
'பாவலரேறு தமிழ்க்களம்'
தாமரை பெருஞ்சித்திரனார்,
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

தொகை வழங்குவோர் 'பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளை' – என்னும் பெயரில் வரைவோலையாகவோ, காசோலையாகவோ, பணவிடை வழியோ மேற்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்.

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

சுவடி : 27) தி.பி.உ0உசு – துலாம் (நவம்–'95) (ஓலை 12

சிறுமைப்படும் பெரும்பெயர்கள்!

தமிழ்நாட்டில் மாவட்டங்களைப் பிரித்துப் புதிய மாவட்டங்கள் தோற்றுவிப்பதும், அவற்றுக்கெல்லாம் புதிய சிறப்புப் பெயர்களைச் சூட்டுவதும் பெரும்பொருட்செலவில் ஆரவார விளம்பரங்களுடன் தொடக்கவிழா நடத்துவதும் கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மாவட்டங்களையடுத்துப் போக்குவரத்துக் கழகங்களும் இத்தகைய பேறுகளைப் பெற்றுள்ளன.

பிரிக்கப்பட்டவற்றுக்குப் பெயர் சூட்டுவது என்னும் நிலைமாறி, பெயர் சூட்டுவதற்காகவே பிரிக்கப்படுவது என்னும் நிலை ஏற்பட்டிருக்கின்றது!

இவ்வாறு சூட்டப்படும் பெயர்களெல்லாம் என்ன அடிப்படையில், அப் பெயர்களுக்குரியவர்களின் எவ்வகைத் தொடர்பு முதன்மைப் படுத்தப்பட்டுச் சூட்டப்படுகின்றன என்பதைக் கூர்ந்து நோக்கினால், இவற்றுக்குப்பின் இழிவான ஒரு நிலை தலைதூக்கி நிற்கின்றது!

ம.கோ.இரா. ஆட்சிக்காலத்தில் ஈரோடையைத் தலைநகராகக் கொண்ட மாவட்டம் பிரிக்கப்படுகையில், பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி அம் மாவட்டத்துக்குப் பெரியார் பெயர் சூட்டப்பட்டது உண்மையில் பராட்டுக்குரியதாகவே அமைந்தது.

அடுத்துப் பிரிக்கப்பட்ட சிவகங்கை மாவட்டம் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் என்று பெயர் சூட்டப்பட்டது. ஆனால், அப் பெயரில் 'தேவர்' என்னும் சாதிப்பட்டம் தவிர்க்கப்பட்டது. அவ்வளவில் பாராட்டுக்குரியதேயாயினும். அச் சாதிக்குரியவர்களால் அதைச் செரித்துக் கொள்ளமுடியவில்லை.

தெருப்பெயர்களிலெல்லாம் சாதிப்பட்டங்கள் ஒட்டிக் கொண்டுள்ளனவே என்று சுட்டிக்காட்டப்பட்டபோது அவற்றை யெல்லாம் நீக்கிவிடுமாறு துணிந்து உத்தரவிட்டார் ம.கோ.இரா. அது நடைமுறைப்படுத்தப்பட்டது. ம.கோ.இரா. ஆட்சிக்காலத்தில் செய்யப்பட்ட உருப்படியான செயல்கள் ஒன்றிரண்டு உண்டென்றால் அவற்றில் இச் சாதிப்பட்ட நீக்கமும் ஒன்று.

ஆனால், யார் செய்தாலும் நல்லன செய்தால் பாராட்ட வேண்டும் என்னும் மனப்பான்மையின்றி, அதில் நேர்ந்த சில குறைகளைப் பெரிதுபடுத்திக் கிண்டல் செய்தவர்களும் பெருமைமிக்க வரலாறெல்லாம் சிறுமைப் படுத்தப்பட்டுவிட்டதாக அங்கலாய்த்தவர்களும் உண்டு.

மேற்கூறிய பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் என்னும் பெயர் 'தேவர்' என்னும் சாதிப்பட்டம் இல்லாமைக்கு ஏங்கியவர்கள். அடுத்து வந்த கலைஞர் ஆட்சிக்காலத்தில் அப்பட்டத்தை ஒட்டிவிட முற்பட்டார்கள். அதன்விளைவாக அது பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டம் எனக் கலைஞரால் மாற்றப்பட்டது.

அடுத்துத் தோன்றிய காமராசர், காயிதே மில்லத்து, அம்பேத்கர், கட்டபொம்மன், வ.உ.சிதம்பரனார் என்னும் பெயர்களும் சம்புவராயர் என்னும் பெயரும் அரசியல் ஊதியம் கருதி இலைமறை காயாக ஆங்காங்குள்ள ஒவ்வொரு பகுதி மக்களை நிறைவு செய்து மகிழ்வூட்டும் நோக்கத்துடனேயே சூட்டப்பட்டன என்பதில் ஐயமில்லை.

மேற்கூறிய தேவர் திருமகன் மாவட்டத்தைப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என்று மாற்றி நிறைவான பாராட்டைப் பெற்றுக் கொண்டார் செயலலிதா. தொடர்ந்து இராமசாமிப் படையாட்சியார், பெரும்பிடுகு முத்தரையர்,

சின்னமலைக் கவுண்டர் என்னும் சாதிப் பட்டம் ஒட்டிக்கொண்டுள்ள பெயர்களெல்லாம் மாவட்டப் பெயர்களில் இடம் பெற்றுள்ளன.

இனிப் போக்குவரத்துக் கழகங்களின் பெயர்களிலும் மேற்கூறிய வாறு சாதிப் பெயர் ஒட்டப்படுவது வாடிக்கையாகிவிட்டது. வீரமுத்துக்கோன் என்னும் பெயரில் போக்குவரத்துக் கழகம் அமைக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டு ஒரு சாதியார் முதலமைச்சர் செயலலிதாவுக்கு நன்றி தெரிவித்து விளம்பரம் வெளியிட்டு மகிழ்ந்துள்ளனர்.

இன்னொரு சாதியார்க்கு அரசு இழைத்த கொடுமையை மறைக்கவே வீரன் சுந்தரலிங்கம் என்னும் பெயர் புதிய போக்குவரத்துக் கழகம் ஒன்றிற்குச் சூட்டப்படுவதாக அறிவிப்புச் செய்யப்பட்டிருக்கிறது!

அரசியல் ஊதியங்கருதியும் மேட்டுக்குடி மனப்பான்மை யுடனுமே இப்பெயர்கள் சிலவற்றில் சாதிப் பட்டங்கள் வலிந்து ஒட்டப்பட்டிருக்கின்றன; மற்றுஞ் சிலவற்றில் தவிர்க்கப்பட்டிருக் கின்றன.

இச் சாதிச் சகதிக்கிடையில் திருவள்ளுவர் பெயரும் இடம் பெற்றிருப்பதற்குக் கரணியம், அவர் உலகப் பொதுமறை தந்த ஒள்ளியர் என்பது மட்டுந்தானா என்றுங்கூட ஐயுற வேண்டியுள்ளது.

சாதிக் கட்டமைப்பை வலுப்படுத்தி அரசியல் ஊதியம் பெறும் புல்லிய நோக்குடன், மதிப்புக்குரிய பெருமக்கள் சிலரின் அருஞ்செயல்களையும், அறிவாற்றலையும், ஈகச் சிறப்பையும் இன்னபிறவற்றையும் பின்னுக்குத் தள்ளி அவர்களுடைய பெயர்கள் சாதி அடையாளங்களாகச் சிறுமைப்படுத்திக் காட்டப்படுகின்றன. பெருமக்களை இழிவு படுத்தும் வகையில் பெருநிலைத் தகுதியற்றவர்கள் சிலர் பெயர்களும் சாதியடிப்படைக்காகவே தேடிப்பிடித்துச் சூட்டப்படுகின்றன; 'மாவட்டங்களுக்கும் மற்ற வற்றுக்கும் மக்கட்பெயர் சூட்டுவதையே தவிர்த்து விட்டாலுங்கூடத் தாழ்வில்லை' என்னுமளவிற்கு அப்பெரும்பெயர்கள் சீரழிக்கப் படுகின்றன. இவையெல்லாம் பெரிதுங் கண்டிக்கத் தக்கன! ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் இவ்வழிநிலைப் போக்கு முற்றும் விட்டொழிக்கப்பட வேண்டும்!

எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு. – குறள் 470

– இறை.

நூறாசிரியம்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

பாட்டு : 68

நாணுகம் பெரிதே நாணுகம் பெரிதே
மாணுறு தீந்தமிழ் மகனை யாகி
பூப்பறு நெஞ்சுகப் புரிந்து நாணொடு
காப்பறு நாவின் மீச்சுவை மிசைந்து
செவித்துளை புகுந்த வீரொரு பிறசொற்
கொள்ளார் வழியும் இடையிடைக் கிளந்து
கல்லாப் புல்லுரை கரைந்து கடுப்புற
வல்லேம் யாஅம் எனவலம் வரூஉம்
வெம்மார் மாக்களை விதந்து
நம்மோர் எனற்கு நாணுகம் பெரிதே!

பொழிப்பு :

யாம் பெரிதும் நாணுகின்றேம்! யாம் பெரிதும் நாணுகின்றேம்! மாட்சிமை பொருந்திய இனிய தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மகனாகப் பிறந்தும் மலர்ச்சியுறாத தன் மனம் விரும்பியவாறெல்லாம் செயற்பட்டு, நாணமும் அடக்கமும் அற்ற தன் நாவினால் சுவைமிகு உண்டிகளை உட்கொண்டு, தன் செவியாகிய துளையின்கண்ணே புகுந்த இரண்டொரு வேற்றுமொழிச் சொற்களை அவற்றை விளங்கிக் கொள்ளாதவிடத்திலும் இடையிடையே வெளிப்படுத்தி, முறையாகக் கற்றுத் தெளியாத புல்லிய சொற்களால் உரையாடி ஆணவத்தோடு 'யாஅம் பெரிதும் வல்லமையுடையேம்' என்று ஊரைச் சுற்றி வருகின்ற கொடுமை வாய்ந்த கயவர்களைச் சிறப்பித்து நம்மேவர்கள் என்று கூறிக்கொள்வதற்கு யாம் பெரிதும் நாணுகின்றேம்.

விரிப்பு

இப் பாடல் புறப்பொருள் பற்றியது.

சிறப்பு மிக்க தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மகனாய் இருந்தும், மனம் பண்பட்டு விரிவடையப்பெறாது அதன்வழி விரும்பியவாறெல்லாம் செயற்பட்டுச் சுவைபட உண்டு நவைபடப்பேசிக்

உரை : திருக்குறள்மணி இறைக்குருவனார்.

செருக்கொடு திரியும் இழிதகையாளரை அவர் தமிழர் என்பதுபற்றி நம்மவர் என்று சொல்லிக் கொள்வதற்கு நாணிப் பாடியது இப்பாட்டு.

நாணுகம் பெரிதே நாணுகம் பெரிதே: மாந்தர் தம் நிலைக்குப் பொருந்தாத கருமங்களைச் செய்யப் பின்வாங்குதல் நாணம் எனப்படுதலின், ஈண்டு ஆசிரியர், தமிழினத்துப் பிறந்தார் சிலர் இழிதகையாளராய் இருந்தும் அவரைச் சிறப்பித்து நம்மவர் என்று சொல்லிக் கொள்வதற்குப் பெரிதும் நாணுகின்றேம் என்றார்.

அடுக்கு இளிவரல் மிகுதியான் வந்தது!

மாணுறு தீம் தமிழ் மகனை யாகி: தலைக் கழகக் காலத்திற்கு முன்பே வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவர் முதன்முதலாக உயிர் மெய்க்குந் தனிவடிவு கண்டு ஒலியன் முறையில் நெடுங் கணக்கு வகுத்து, எண் பெயர் முதலிய பத்து அகமும் கிளவி புணர்ச்சி என்றும் இரு புறமுமாகிய பன்னீரெழுத்திலக்கணமும் தோற்றி, இயல் திரிவு திசை என்னும் மூவகைச் சொல்லும் முதனிலை ஈறு முதலிய அறுவகைச் சொல்லுறுப்பும் தொகையும் விரியுமாகிய பதினால்வகைச் சொற்றொடரும் ஆய்ந்தும், மருளறு சிறப்பின் பொருளிலக்கணம் கண்டும் இருவகை வழக்கினும் அருகுதலில்லா என்றுமுள தென்றமிழ், பன்னெடுங் காலத் தொன்மையும் ஏனை மொழிகளினு முந்திய முன்மையும் பல மொழிகளைத் தோற்றுவித்த தாய்மையும் பிறமொழிகளால் பிறழாத தூய்மையும், எற்றைக் காலத்தும் ஏற்புற வளரும் இளமையும் சொற்சிறப்பாலும் இலக்கியப் பரப்பாலும் வளமையும், இலக்கண வரம்பால் செம்மையும் இயல் இசை நாடகம் என்னும் மும்மையும், பழகுறு சிறப்பின் இயன்மையும் பலதுறைகொண்ட வியன்மையும் ஆய்வுச் செறிவால் நுண்மையும் அயன் மொழிகளுக்கும் சொற் பொருள் அளிக்கும் வண்மையும் என்றும் இருக்கும் நிலமையும் ஏனை மொழிகளின் மேம்பட்ட தலைமையும், கலப்பு வேண்டாத தனிமையும் கேட்பார்க்கும் கிளர்வார்க்கும் இனிமையும் என மொழிநூன் மூதறிஞர் எடுத்துக் காட்டும் பதினாறு வகையின் ஓங்கிய சிறப்பும் பாங்குறப் பெற்ற மொழியாதலின் மாணுறு தமிழ் என்றார். இது மேலும் விரிப்பிற் சாலப் பெருகும்.

தீந்தமிழாவது இனிமை வாய்ந்த தமிழ். மாணுறு தமிழ் எனினே அமையும்; மற்றுத் தீந்தமிழ் என இனிமையை விதந்து வேறுபடக்கூறியது என்னை யெனின், தமிழின் பிற சிறப்புகளெல்லாம் ஆராய்ச்சி வகையான் புல மக்கள் மட்டுமே அறிந்துணரக் கிடக்க அதன் இனிமையோவெனின் இளஞ்சிறாரும், பொதுமக்களும் எளிதிற் சுவைக்குமாறும் மொழியறியா அயலவரையும் ஒலிவகையால் ஈர்த்து இன்புறுத்துமாறும் அமைந் திருத்தலின் அதன் ஏற்றங் கூறுமுகத்தான் அதனைத் தனித்தெடுத்துக் கூறினார் என்க!

செய்யுளும் ஒரு வகை வழக்கே யாயினம் அதன் பெருஞ்சிறப்புக் கருதி 'வழக்குஞ் செய்யுளும்' என்ற விடத்து வேறுபடுத்திக் கூறியது போல இதனைக் கொள்க.!

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மாந்தன் என்பார் தமிழ் மக்களை ஆகியும் என்றார். மகனை என்பதன்கண் ஐகாரம் அசைநிலை உம்மை தொக்கது.

தாய்மொழியாவது இயல்பின் வந்த உரிமைமொழி.

பூப்பறு நெஞ்சு உகப்புரிந்து: பூப்பறு நெஞ்சாவது மலர்ச்சியுறாத மனம்-கல்வி கேள்விகளானும் உலகியலறிவானும் பண்பட்டுப் பரந்த நோக்கும் நடுநிலையுணர்வும் பொது நல விழைவுங்கொண்டு விரிவுறாது போலி நாகரிகப் போக்கும் ஆரவாரச் செருக்கும் தன்னல வேட்கையும் கொண்ட மனம்.

உகப்புரிதலாவது மனம் விரும்பியவாறு புல்லிய செயல்களை செய்தல். மனம் பூப்பறு நெஞ்சு எனப்பட்டமையின் அதன் வழிப்பட்ட செயல்களும் புல்லியவை எனப்பட்டன. அவையாவன வெற்றாரவார வெறும்பகட்டுப் போலி நாகரிகச் செயல்களும் பிறவுமாம்.

நாணொடு காப்பறு நாவின் மீச்சுவை மிசைந்து:

நாவிற்கு நாணமாவது அவையல் கிளவிகளை இடக்கர் அடக்காது பேசக் கூசுதல்.

காப்பு:- கட்டுப்பாடு. அதாவது தீயவற்றில் தலைப்படாத அடக்கம். நாவடக்கமாவது பொய் குறளை கடுஞ்சொல் பயனில்சொல் என்னுஞ் சொற்குற்றங்களைத் தவிர்த்தல்.

இனித் தன் முயற்சியின்றிப் பிறருழைப்பின் வந்தவற்றைச் சுவைத்து உண்ணற்கும் ஏழை எளியோர் பசியால் வாடப் பார்த்தும் சிறிதும் இரங்காது உண்ணற்கும் அயலவர் முகஞ் சுளிக்குமாறு அநாகரிகமாக சுவைத்து உண்ணற்கும் கூசாமையையும் நாவிற்குரிய நாணமின்மையாகவும், அகாலத்திலும் நோயுற்றவிடத்தும் சுவையைத் தவிர்க்கமாட்டாமல் ஏலா வுண்டியை விரும்பியாங்கு உண்ணுதலையும் நாவடக்கமின்மையாகவும் கொள்ளலுமாம்.

பசியும் உடனலமும் நோக்கியுண்ணாது சுவையையே பெரிதும் விரும்பி யுண்ணலைக் குறித்து மீச்சுவை மிசைந்து என்றார்.

செவித்துளை............ கரைந்து: அரும்பொருள் குறித்து ஆன்றோர் கூறும் நறுந்தமிழ்ச் சொற்களை விரும்பிக் கேளாமையின் செவியைத் துளை என்றார்.

இருடீர் மணிவிளக்கத்து ஏழிலார் கோவே
குருடேயும் அன்றுநின் குற்றம் – மருடீர்ந்த
பாட்டும் உரையும் பயிலா தனவிரண்டு
ஓட்டைச் செவியும் உள

எனும் ஏழில்மன்னனின் இழிநிலை குறித்த ஔவையார் பாடலிற் கண்டாங்கு ஈண்டு நறுந்தமிழ் பயிலா வெறுஞ் செவிகளை, அவற்றின் புன்மை தோன்றத் துளை என்றும், குறிக்கொண்டு கேளாது காதிற்பட்டன என்பார் புகுந்த என்றுங் கூறினார். இருமை ஒருமை பற்றிய ஈர் ஒரு என்னும் சிற்றெண்கள் அச்சொற்களின் சின்மை குறித்து நின்றன.

பிற சொல்லாவன ஆரியம் ஆங்கிலம் முதலிய பிற மொழிகளின் சொற்கள். விளங்கிக் கொள்வார் இல்லாதவிடத்தும் தம் உரையாட்டின் இடையிடையே பிறமொழிச் சொற்களை வெளிப்படுத்துதல் வரட்டுப் பெருமையும் போலி நாகரிகமும் கருதியும் நல்லறிவின்மையானும் என்க.

மேற்'புகுந்த' என்றமையின் ஈண்டுக் கிளத்தல் வெளிப்படுத்தல் எனப்பட்டது. பிறரை வலிந்தழைத்தும்தாம் முறையாகக் கற்றுத் தெளியாத புல்லிய சொற்களைப் பன்னிப் பன்னிப் பேசும் இயல்பு பற்றிக் கரைந்து என்றார். புல்லிய சொற்களாவன பொருட்சிறப்பற்றன.

கடுப்புற வல்லேம் யாஅம் என வலம் வரூஉம்: 'யாம்' வல்லமை யுடையேம்' என வாய்நீட்டலும் குறிக்கோளின்றி ஊரைச்சுற்றி வருதலும் செருக்கு மிகுதியின் வெளிப்பாடுகளாம். கடுப்பு-செருக்கு. வலம் வருதல் சுற்றித் திரிதல் என்னும் அளவாய் நின்றது.

யாஅம், வரூஉம் என்னும் அளபெடைகள் இசைநிறைத்தன வேனும் அவை நிரலே செருக்கும் வியப்பும் உணர்த்தி நிற்றல் நுண்ணிதின் உணர்க!

வெம்மார் மாக்களை....பெரிதே: கடப்பாடு உணராதும் கட்டுப் பாடு இன்றியும் பிறருழைப்பை யுறிஞ்சியும், அறிவுநலமும், பண்பாடும் நாகரிகமுமின்றியும், வீறாப்புப், பேசித் தருக்கித் திரிவார் கொடுமை வாய்ந்த கயவர்களாதலின் அவர்களை வெம்ஆர் மாக்கள் என்றார்.

மேல் 'மகன்' என்றவர் ஈண்டு 'மாக்கள்' என்றது அத்தகையோர் தொகை மிகுதிபற்றி என்க! அவ் இழிதகையாளரை நம்மவர்கள் என்றலும் அவர்கட்குச் சிறப்பாய் அமைதலின் விதந்து என்றார்.

மொழியுரிமையானும் இனச்சார்பு நிலச்சார்புகளானும் அவர்களை நம்மவர்கள் என்றல் எளிதில் தவிர்க்கவியலாமையின் நாணுகம் பெரிதே என்று மீண்டும் கூறினார்.

இப்பாடல் பொதுவியல் திணையும் முதுமொழிக் காஞ்சித் துறையுமாம்.

ஆட்சிமொழி பயிற்றுமொழி எல்லாமே தமிழ்தான்!

ஆங்கில ஆளுமையை அறவே ஒழிப்போம்!

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் இராமதாசு நேருரை!

''நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஆங்கில ஆளுமையை ஒழிப்போம்; ஆட்சிமொழி, பயிறறு மொழி எல்லாமே தமிழாக ஆக்குவோம்'' என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் இராமதாசு 3.11.95 அன்று திண்டிவனத்தில் தென்மொழிக்கு அளித்த சிறப்பு நேருரையில் கூறினார்.

மருத்துவர் இராமதாசு அளித்த நேருரை விளத்தம் வருமாறு :

● **ஒருமொழிக் கொள்கையைக் கொண்டுள்ள தாங்கள் இருமொழிக் கொள்கை வைத்துள்ள தி.மு.கழகத்துடன் மொழிவகையில் எவ்வாறு ஒத்துப் போகிறீர்கள்?**

★ இருமொழிக் கொள்கையுடையவர்களையும் ஒருமொழிக் கொள்கைக்குக் கொண்டுவரமுடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இங்குள்ள பல்வேறு கட்சிகளுக்கும் மொழிநிலையில் தனித்தனிக் கொள்கைகள் உண்டு. நாங்கள் ஒரு மொழிக் கொள்கை வைத்திருப்பதனால் தேர்தல் கூட்டணி என்று வருகிறபோது ஒருமொழிக் கொள்கையுடைவர்கள் யாரென்று தேடமுடியாது. மூன்று மொழிக் கொள்கையுடைவர்களிடம் போகவில்லை. ஆனால்,

இருமொழிக் கொள்கையுடையவர்களிடம் போகிறோம். இருமொழிக் கொள்கையுடைய தி.மு.கவினருங்கூடத் தமிழுக்கு எதிரானவர்கள் அல்லர். தமிழாய்ந்த தமிழன் கலைஞர்.

● ஒருமொழிக் கொள்கையை வலியுறுத்துகின்ற தாங்கள் அதை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டமாக எதை வைத்திருக்கிறீர்கள்?

★ முதலில் ஆங்கிலத்தை அகற்றினால்தான் ஒருமொழிக் கொள்கையைக் கொண்டுவர முடியும். இந்தியை நாங்கள் இங்கு வரவிடமாட்டோம். ஆனால், இந்தியைவிட மோசமாக ஆங்கிலத்தினுடைய ஆளுமைதான் இருக்கிறது. இப்போது சமற்கிருதத்தினால்கூடத் தமிழுக்கு அப்படியொன்றும் புதிய கேடில்லை. அது கெடுத்ததெல்லாம் முன்பு. ஆனால், இப்போது நடைமுறை வாழ்க்கையிலே பார்த்தோமென்றால் ஆங்கிலம்தான் அதிகமாக ஆளுமை செய்வதாக இருக்கிறது. யாராக இருந்தாலும் ஆங்கிலக் கலப்பு இல்லாமல் பேசுவதில்லை.

ஆங்கிலமொழி - ஆங்கிலக் கல்வி வளர்ச்சிக்கான அனைத்து முயற்சிகளையும் அரசு செய்திருக்கிறது. இதற்கு முன்னால் இருந்தவர்களும் அப்படியே. ஆனால், அரசு அதிகாரம் நம்மிடம் இருந்தால் ஒரே ஒரு அரசாணை போட்டு எல்லா ஆங்கிலப் பள்ளிகளையும் நிறுத்திவிடலாம்.

விருப்பப்பாடமாக ஆங்கிலம் இருக்கலாம். ஆங்கிலம் மட்டுமல்ல. பிரஞ்சு, சப்பானியம் போன்ற மொழிகளைப் படிக்கிறதென்றாலும் விருப்பப்பாடமாகப் படிக்கலாம். அதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளலாம். ஆனால் ஒருமொழிக் கொள்கைதான் இருக்க வேண்டும்.

பணக்காரர்கள் படிக்கிறதென்றாலும் சரி, ஏழைகள் படிக்கிறதென்றாலும் சரி எல்லாப் பாடமும் தமிழில் தான் இருக்கவேண்டும். வேறு எந்த மொழியிலும் இருக்கக் கூடாது. அதற்கேற்ற அரசு ஆணையைப் பிறப்பிக்க வேண்டும். இது அப்படியொன்றும் பெரிய செயலல்ல. இதற்காகப் பட்டி மன்றம் அது...இது எனத் தேவையில்லை. ஒரே ஓர் அரசாணை - ஆட்சிமொழி, பயிற்றுமொழி எல்லாமே தமிழ்தான்!

● **அரசாணை இருந்தாலும் அதை நடைமுறைப்படுத்த வேண்டுமே...? இப்போது பெயர்ப்பலகைகள் தமிழில் இருக்க வேண்டும் என்றும் அரசாணை இருக்கிறது. இருந்தாலும் அது நடைமுறைப் படுத்தப்படுவதில்லையே?**

★ நடைமுறைப்படுத்தாத அதிகாரிகளுக்குத் தண்டனை கொடுக்கவேண்டும். வேலைநீக்கம் செய்ய வேண்டும். கருநாடக மாநிலத்திலே மாவட்ட அளவிலேகூடக் கண்காணிக்கக் குழு அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழு சொல்வதை அதிகாரிகள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

● **பயிற்று மொழித் தொடர்பாக முன்பு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகளுங்கூட எதிர்ப்புகளால் செயலிழந்துவிட்டனவே?**

★ கடந்த காலத்தை மறந்துவிடுங்கள். யார் தவறு செய்தார்கள், யார் சரியாகச் செய்யவில்லை என்பதை இப்போது பார்க்க வேண்டாம். அதே நேரத்தில் மொழிக் கொள்கையை முகாமையான (முக்கியமான) கொள்கையாக வைக்க வேண்டும். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஆங்கிலத்தின் ஆளுமையை ஒழிப்போம். இந்தியை இங்கு எட்டிப் பார்க்காமல் செய்வோம். எல்லாமே தமிழாக இருக்க வேண்டும் என்பதைக் கொள்கையாக வைப்போம். முந்தைய தேர்தலிலேயே அதை வைத்திருந்தோம். கூட்டணியிலேகூட அந்தக் கொள்கையைக் கட்டாயம் வைப்பேன். அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற மனம் தான் வேண்டும்!

● **பாட்டாளி மக்கள் கட்சியை ஒரு சாதிப்பிரிவிற்கு அப்பாற்பட்டு மக்கள் பார்க்கவில்லையே? 'நான் பார்ப்பாத்திதான்' என்று சட்டமன்றத்திலேயே வெளிப்படையாகக் கூறிய பின்னும் செயலலிதாவை மக்கள் ஏற்கின்றனரே?**

★ பாட்டாளி மக்கள் கட்சியை ஒரு குறிப்பிட்ட சாதிக்கட்சி என்று பார்க்கிற நிலை இப்போது மாறிவருகிறது. தென்மாவட்டங்களுக்குப் போனால் பள்ளர் கட்சி என்று சொல்கிறார்கள். இங்கே வன்னியர்கட்சி என்று சொல்கிறார்கள். முசுலிம் மக்கள் வாழ்கிற இடங்களிலே துலுக்கர் கட்சி என்கிறார்கள். கன்னியாகுமரி பகுதியிலே நாடார் கட்சி என்கிறார்கள். இதுபோன்று எல்லாப் பகுதிகளிலும் அந்தந்தச் சாதிப்பெயரைச் சொல்லி அந்தக் கட்சி என்கிறார்கள். ஆக, எல்லா இடங்களிலும் பா.ம.க.வுக்கு வரவேற்பு உள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சியை ஏன் சாதிக்கட்சி என்று பார்க்கிறார்கள் என்றால், இங்குத் திரைப்படப் பண்பாடே (சினிமா கலாசாரம்) வேரூன்றியிருக்கிறது. தான் பார்ப்பாத்திதான் என்று முதலமைச்சர் சொன்னாலும் - பிராமணர் சங்கம் தூண்டிவிட்டாலும் மக்களிடம் விழிப்புணர்ச்சி இல்லாததால் அப்படி உள்ளது. குறிப்பாக இளைஞர்கள் நிலை அப்படியுள்ளது. 'எது நல்ல கட்சி? எது தமிழர்களுக்காகப் பாடுபடுகிற கட்சி? யார் நல்ல தலைவர்?' என்பது தெரியவில்லை! முதலமைச்சரை எங்குத் தேடுகிறார்கள்? திரைப்படக் கொட்டகையில் போய்த் தேடுகிறார்கள்; முடிவு எடுக்கிறார்கள்.

○ ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள எங்கள் இளைஞர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். செயலைத் தொடங்கிவிட்டோம்!

○ பா.ம.கவிலே எங்கள் கட்சியிலே பார்ப்பனர்களைச் சேர்ப்பதில்லை!

○ இன்றைய இளைஞர்களின் போக்கிற்குத் திரைப்படக் கவர்ச்சி அரசியலாக்கப்படுவது - பொய்யே அரசியலாக நடப்பதுதான் காரணம்!

○ இரசினி அரசியலுக்கு வந்தால், அதை விடப் பேரழிவு வேறில்லை!

மொழி இனம் நாடு என்பவற்றைப் பற்றியெல்லாம் இளைஞர்கள் கவலைப்படவில்லை; யார் ஆட்சிக்கு வரவேண்டும் - ஆளவேண்டும் என்பது பற்றியெல்லாம் அவர்களுக்குக் கவலையில்லை. ஒன்று திரைப்படம் பார்க்கிறார்கள்; மற்றொன்று 'தண்ணி' அடிக்கிறார்கள். நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காட்டினர் இளைஞர்கள் இப்படித்தான் இருக்கிறார்கள். ஒரு பத்துப்பேர்தான் மீறி வருகிறார்கள்.

தாய்மொழி என்றெல்லாம் யாருக்கும் உணர்வு இல்லை. இவை எல்லாவற்றுக்கும் காரணம் திரைப்படக் கவர்ச்சி அரசியலாக ஆக்கப்படுவது - பொய்யே அரசியலாக நடப்பதுதான்.

● இத்தகைய நிலையை மாற்றுவதற்கு என்ன திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்? எப்படிச் செயல்படுத்துகிறீர்கள்?

★ இவற்றைப் பற்றியெல்லாம் எங்கள் கூட்டங்களில், திருமணங்களில் நிறையப் பேசுகிறோம். இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுக்கிறோம். எங்கவிடம் உள்ள இளைஞர்களை இதுமாதிரி நிலையில் உருவாக்குகிறோம். இதனை நாங்கள் நன்றாகவே செய்து வருகிறோம்; இளைஞரணியை வலுப்படுத்தி வருகிறோம்.

இப்போது ஊழல் ஒழிப்புத் தொடர்பாக ஆயிரக் கணக்கான இளைஞர்களை உருவாக்கி வைத்திருக்கிறோம். 'ஊழலை ஒழிக்க முடியாது; அது கடினம்; ஊழல் மிகவும் மலிந்துவிட்டது என்று சொல்லி எல்லோரும் கைவிட்ட நிலையில் ஆயிரக்கணக்கான இளைஞர்களை அணியப்படுத்தி (தயார்ப்படுத்தி) முன்னாள் தலைமையமைச்சர் வி.பி.சிங் தலைமையில் தொடங்கியிருக்கிறோம்.

மதுவொழிப்பு, அருவருப்பு(ஆபாச)க் காட்சியொழிப்பு நடவடிக்கைகளைப் பூலான் தேவியை அழைத்துச் செய்தது போன்று செய்து வருகிறோம். ஒன்றியத்துக்கு ஐந்து இளைஞர்கள், நகரத்துக்கு ஐந்து இளைஞர்கள் மேனி ஆங்காங்குச் செயல்படுகிறார்கள். அரசு அதிகாரிகளிடம் என்னென்ன ஊழல்கள் மலிந்திருக்கின்றனவோ - பங்கீட்டுக் கடைகள் ஊட்ட உணவு (சத்துணவு)க் கூடங்களிலிருந்து தொடங்கிச் சிற்றூர் அதிகாரிகள், வட்டாட்சியர் உள்ளிட்ட எல்லா நிலைகளிலும் உள்ள ஊழல்களை எதிர்த்துச் செயல்படுகிறோம்.

● எதிர்த்துச் செயல்படுவது என்றால்... எத்தகைய முறையிலான செயற்பாடுகள் என்று சொல்லமுடியுமா?

★ முதலில் மக்களுக்கு விழிப்புணர்ச்சியூட்டுவது. அதற்கெனத் தனிப்பிரிவு; கவனம். இரண்டாவது ஊழலை மக்களுக்குத் துண்டறிக்கை மூலம் அம்பலப்படுத்துவது. மூன்றாவதாக மெதுவான அமைதிவழிப் போராட்டங்கள். நான்காவதாக மறியல். கடைசியாக உதைப்பதுதான்! அதற்குத்தான் ஊழல் பேர்வழி அஞ்சுகின்றான்! இதை நாம் முதலிலே தொடங்குவதில்லை.

● திராவிட மாயையை எதிர்க்கக் கூடிய தாங்கள் ஆரியப் பார்ப்பன ஏமாற்றுகளை எதிர்க்க என்ன வகையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறீர்கள் ?

★ எங்கள் கட்சியிலே பார்ப்பனர்களைச் சேர்ப்பதில்லை என்று முடிவு செய்துள்ளோம். அதே போல முதலமைச்சரைச் சுழற்சி முறையில் கொண்டுவரும் நிலையிலும் பார்ப்பனர்களைக் கொண்டுவர உடன்படுவதில்லை. பார்ப்பனர்களால் - பார்ப்பனீயத்தால் நாம் எவ்வளவு ஏமாற்றப்பட்டோம் என்பதைச் சொல்லி வருகிறோம். இப்போது நடைபெறுகிற கூட்டங்களில் திராவிடர் கழகங்களைவிடப் பார்ப்பனர்களைக் கண்டிப்பவர்கள் நாங்கள்தான். பார்ப்பனர்களை எதிர்க்கவேண்டும் என்பதை விரிவாகப் பேசிவருபவர்கள் நாங்கள்தான்.

● திரைப்பட நடிகரைச் சார்ந்த அரசியல் போக்குகள் பற்றி...

★ இரசினியெல்லாம் இப்போது அரசியலுக்கு வந்தார்களென்றால் இதைவிடப் பேரிழிவு தமிழகத்திற்கு வேறொன்றுமில்லை ; தமிழ்நாட்டை - தமிழர்களை யாருங் காப்பாற்ற முடியாது.

இதில் வேடிக்கை என்னவென்றால் இரசினி சுவைஞர் மன்றத்தினர் 'முத்தமிழே வருக !' என்கிறார்கள். யாரைப் பார்த்து ? இரசினியைப் பார்த்து ! 'தலைவா தமிழகத்திற்கு நல்வழியைக் காட்டுக !' என்கிறார்கள். 'இப்படிச் சுவைஞர் மன்றம் வைத்திருப்பவன் தான் ஒரு முட்டாள் என்று (நெற்றியில்) எழுதி வைத்திருக்கிறான் - இப்படி நான் சொன்னது வெளிப்படையாகச் செய்தித்தாளில் வந்துள்ளது.

● தேர்தல் பாதையில் நம்பிக்கையில்லை என்று குறிப்பிடுகிற தாங்கள், அதற்கான மாற்றுவழியாக எதைக் கூறுகிறீர்கள் ?

★ தேர்தல் பாதையில் நம்பிக்கை இல்லை என்று சொல்ல முடியாது. இப்போது போலி மக்களாட்சி (ஜனநாயகம்) இருந்தால்கூட அதை உடனடியாக மாற்றுகிற - புரட்சி செய்து மாற்றுகிற அளவில் மக்களும் இல்லை ; இப்போதுள்ள அமைப்புகளும் இல்லை. அதனால், இளைஞர்களைச் சிறிதுசிறிதாக அதற்கான பயிற்சியில் ஈடுபடுத்த வேண்டும். அதனால் தேர்தலில் ஈடுபடும் இயக்கமாக நாங்கள் வைத்துள்ளோம்.

● தமிழ்த் தேசியத்தை வலியுறுத்துகிற தாங்கள் இந்தியத் தேசியம் பேசுகிற கட்சிகளுடன் கூட்டணி சேர்வது முரணாகாதா?

★ முரண்தான். ஆனாலும், தேர்தல் கூட்டணி என்று வருகிறபோது - தேர்தல் நேரத்தில் எல்லாக் கட்சிகளின் கொள்கைகளையும் முழுமையாகப் பார்க்கமுடியாது. அதனால்தான் இந்தியத் தேசியக் கட்சிகளோடு - பொதுவுடைமைக் கட்சி போன்றவற்றோடு கூட்டணி வைக்கின்றோம்.

● தமிழறிஞர்களை எதிரிகளாகக் கருதித் தண்டனை வழங்கியும் தனிமைப்படுத்தியும் தொல்லை கொடுத்து வருகிற இப்போதைய தமிழக அரசிற்குத் தங்களின் எதிர்நடவடிக்கை என்ன?

★ அதற்காக நாங்கள் குரல்கொடுத்துள்ளோம்; கண்டனம் தெரிவித்துள்ளோம். எங்களின் ஆற்றலுக்கு ஏற்பச் செய்துள்ளோம். அறிஞர் குணாவைத் 'தடா' வில் போட்ட போதுகூட உண்ணாநோன்பு ஆர்ப்பாட்டம் செய்துள்ளோம்.

● பாவலரேறு ஐயா அவர்களைக் குறித்தும், தென்மொழி இதழ்-இயக்கம் குறித்தும், அதன் எதிர்காலத் தேவை குறித்தும்...

★ ஐயாவின் கொள்கைகளைப் பரப்பவேண்டும்; நிறைவேற்ற வேண்டும். அதுதான் நாம் அவர்க்குச் செய்யும் மிகப்பெரிய கடமையாகும். நாம் எதையும் வாயால் சொல்லிவிட்டு இருந்துவிடக் கூடாது; செயலில் காட்டவேண்டும். அவருடைய நோக்கங்களை - கொள்கைகளை - அவர் எதற்காகப் பாடுபட்டார் என்பதை நாம் மக்களுக்கு எல்லா வகையிலும் கொண்டுசெல்ல வேண்டும். நம் உயிரைக் கொடுத்தாகிலும் பாடுபட வேண்டும். அதை நாங்கள் உறுதியாகச் செய்வோம்.

செவ்வி : **கடுங்கோ, பூங்குன்றன்**

வருந்துகிறோம்

நெடுநாள் தென்மொழியன்பரும், உலகத் தமிழ்க் கழகத்தின் தென்னார்க்காடு மாவட்டச் செயலருமான நெய்வேலி - புலவர் **இரா.அருட்குவை** அவர்கள் கடந்த கன்னி 10 (27.9.95) அன்று மறைவுற்றார். அவ் வரும்பெறலன்பரின் மறைவிற்குத் தென்மொழி தன் ஆழ்ந்த வருத்தத்தை, அவர் தம் குடும்பத்தினர்க்கும் அன்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறது.

– ஆசிரியர்

சாதியா?... ஜாதியா?...

ப.அருளி ஆய்வறிஞர் -
தூயதமிழ்ச் சொல்லாக்க அகரமுதலிகள் துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்.

''ஈ'' - என்னும் உயிர்நெடில்ஒலி, ஓர் அரிய சொல் மூலம். ஓரிலக்கம் ஆண்டுக்கும் முற்பட்டுத் தோன்றியிருக்க வாய்ப் புள்ளவாகிய ஆதிப்பழைமை சான்ற வேரொலிகளுள் ஒன்று, இது!

மாந்தனொருவன், - தன் முகத்துப் பெருங்குழியாகிய வாய்ப் பகுதியை இருபக்கவாட்டிலுமாக நன்கு அகலித்து இரங்கியேங்கிய தோற்றத்தொடு, பிறிதொரு மாந்தனிடம் ஒன்றை வேண்டுவதற்கு இயைவாகத் தேவைப்பாடுகூறும் ஒலியாக இதனை வெளியிட்டிருக்கின்றான்!...

[வேறு : வண்டினத்தைச் சார்ந்த குறும்பறவையாகிய ஈயை, ''ஈ'' என்றவாறு நம் பண்டைய தமிழன் பெயரிட்டுச் சுட்டியது, அது தன் குறுமென்சிறகுகளால் விரைய விரைய அசைத்துப் பறக்கையில் புறப்படுத்திய ஒலித்திரள் அசைவொலி கருதி, அதற்கு ஒப்பீடாக வெளிப்படுத்திய குறியீட்டொலியே ஆகும்! போன்மை ஒலியீடு, ''ஈ'' என்னும் தனிச்சொல்லாகவே ஆகிப் பயன்பட்டுத் தொடர்ந்து நிலைத்தது!

கழகக் காலத்திலுங்கூட, சிறகுகளின் கதழ்வார் துனைவே — அவற்றின் கதியே அவ்வொலி வெளிப்பாட்டின் அடிப்புலக் காரணம் என்பதை அறியாமல் — வண்டினம் ஏதோ தம் வாய்வழி வெளிப்படுத்தும் ஓசையீடு எனவே நந்தமிழர் எண்ணியும் நம்பியும் பேசியும் எழுதியும் வந்தனர். அண்மைச் சின்னூறாண்டுக் கால அறிவியல் வெளிப்பாடுகளே அதனின் உட்புறப் புலவுண்மைகளை விண்டு விளக்கி, ஒலிவரும் கருத்தொளியைக் காட்சி காட்டின! - இந்த ''ஈ'' தனியானது!

சிறகெறும்பு ஈ + அல் > ஈயல் என்றவாறு வேறுபுடையாக்கம் பெற்றுத் தனித்தது. ஈயல், இன்று பேச்சுவழக்கில் ''ஈசல்'' என வழங்கப்பெறுகின்றது.]

ஈ = (இரங்கியவாறு கேட்கும்பொருளில்-) தா.

''தா'' என்றும், ''கொடு'' என்றும் பெறக்கேட்டலுக்கான சொற்கள் வளர்ந்து பயிலப் பெறுகையில், அவை தனித்தனிப் பொருள்களிலாகச் சிறப்புற்று வகைப்பட்டன. முடிவில், ''ஈ'' என்னும் ஒலியீடு, இழிந்தோன் ஒருவன் உயர்ந்தோன்ஒருவனிடம் ஒன்றைப்பெறற்கு வேண்டிச் சொல்லும் சொல்லாகிப்போனது.

''ஈ தா கொடு எனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகுஇடன் உடைய'' (9:48. சொல்.)

என்றவாறு தொல்காப்பியத்திலேயே இச் சொற்களுக்குரிய மரபுநிலை சுட்டப்பெற்றது. (ஆகு இடன் உடைய: ஆகின்ற இடங்களும் உடையன என்றவழி, இம் முச்சொற்களுக்கும் வேறுபிற பொருள்கள் உள்ளமையை இந்நூற்பா சுட்டுவதையும் நன்கு கவனிக்கவேண்டும்.) (''ஈ'' என்றவாறு வண்டின வகையுளொன்றைச் சுட்டும்நிலை, இதற்கோர் எடுத்துக்காட்டு!)

''அவற்றுள்,
ஈ என் கிளவி இழிந்தோன் கூற்றே (சொல்.சொல்: 9:49)
தா என் கிளவி ஒப்போன் கூற்றே (சொல்.சொல்: 9:50)
கொடு என் கிளவி உயர்ந்தோன் கூற்றே'' (சொல்.சொல்: 9:51)

இவ்வகைப் பயில்வு, மரபுவழக்கு வளர்ச்சியின்வழி வகைப்படுத்தப்பெற்றது. தொடக்கத்தில் இச்சொற்கள் உருவாக்கம் பெறுகையில் இவ்வகை மிகைவகுபாடு ஏற்படவில்லை! தருதல் என்னும் பொதுப்பட்ட செப்பப் பொருள்நிலைகளிலேயே இவை மூன்றும் பயிலப்பெற்றன. ஈதல், தருதலே!

ஈ = தா, கொடு.— ஈ + தல் > ஈதல்=கொடுத்தல், தருதல், வழங்குதல்.
ஈ + கு > ஈகு > ஈகு + ஐ > ஈகை = தருகை, கொடை.

(ஒநோ: கொடு + ஐ > கொடை). ஈ + வு > ஈவு = கொடை.
ஈ + தல் > ஈதல் = கொடுத்தல்; தருதல். ஈ + க > ஈக = கொடுக்க!
ஈ + அல் > ஈயல் > ஈய்ல் > ஈல்.
ஈல் + து > ஈற்று = 1. ஈனுகை 2. ஈனப்பட்டது. 3. மரக்கன்று.
ஈற்று + அம் > ஈற்றம் = ஈனுகை.
ஈற்று + உளை > ஈற்றுளை = பிள்ளைப்பேற்றுத் துன்பம். ('பிரசவவேதனை' - (வட.)

ஈல் > ஈன் (ஒ.நோ: நோல் > நோன்
நோன் + பு) நோன்பு = வருத்தம்.)
ஈன் > ஈனு > ஈனு + தல் > ஈனுதல்

ஈனுதல் = 1. தருதல். 2. பெற்றுத்தருதல். 3. கருவுயிர்த்தல் 4. உண்டாக்குதல்.

''ஈன்'' என்னும் வினைவடிவம் அதனின் மூலப்பொருள் வழியே தருதற்பொருளில் தொடங்கி, கருவுயிர்த்துப் பெற்றுத் தருதலையும், முட்டையிடுதலையும், பின்னர் - உண்டாக்குதல் உருவாக்குதல் விளைவித்தல் போலும் பிற பொருள்களிலும் பழந்தமிழில் ஆழ வேரோடி உள்விளர்ந்தது!

ஒப்புநோக்க: ஈனும் = பயக்கும் (குறள்கள்: 31, 74, 180. 754)
= தரும் (குறள் : 311)
= விளைவிக்கும் (குறள் : 361)
ஈன்ற = பெற்ற (குறள்கள்: 69, 1047)
ஈன்று = உண்டாக்கி, கொடுத்து (குறள்:97)
ஈன் + தல் > ஈன்றல் = பயத்தல் (குறள்:99)
[ஒ.நோ: நோன் + தல் > நோன்றல்.
(ஏல் > ஏல் + தல் > ஏற்றல்)
ஏல் > ஏன் > ஏன் + தல் > ஏன்றல் = ஏற்றுக்கொள்ளுதல்]

ஈன்றல் = உண்டாக்குதல் (குறுந்: 90:7)
ஈன்ற தாய் = பெற்றுத் தந்த தாய். ஈன்றவள் = பெற்றுத் தந்தவள்
ஈன்றவள் > ஈன்றாள் = தாய்; ஈன்று புறந்தந்தவளாகிய தாய்.
ஒ.நோ. ''ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே'' (புறம்: 312:1)
ஈனும் தாய்க்குக் கருவைத் தந்த காரணகனான தந்தையும் ''ஈன்றான்'' எனப் பெற்றான். [காண்க: ஈன்றான் (பிங்கலம்).
ஈன்றோன் = தந்தை (சூடா.)
ஈன் + இல் > ஈனில் = ஈனுகின்ற இடம்; பேறுநிகழ்த்திடம்.

ஈனுதல் = 1. கன்று பெறுதல். ''இளம்பிடி ஒருசூல் பத்து ஈனும்மோ'' (புறம்: 130:2)

2. குட்டி பெறுதல். ''புலி புக்கு ஈனும் வறுஞ் சுனை'' (அகம்: 329:13)

3. முட்டையிடுதல். ''பண்ணமழி பழம்பார் வெண்குருகு ஈனும்''
(நற்றிணை:139;4)

ஈன் + அம் > ஈனம். மிகமிகப் பண்டையில் இவ்வாறு வழக்கிருந்து - காலவட்டத்தில் கரைந்து (ஈனம் >) "இனம்" என்றவாறு நின்று நிலைத்தது. இதனை நெடுமுதற் குறுக்கம் அல்லது ஆதிக்குறுக்கம் என்னலாம். ஆங்கு > அங்கு, ஈங்கு > இங்கு, ஈது > இது என்றவாறான படிநிலைகளில் முதல்குறுகி வழக்காறு கொண்ட நிலைகளொடு, ஈனம் > இனம் என்றாகிய குறுக்கமும் ஒருபுடை ஒத்ததாகும்.

ஈனம் > இனம் = 1. ஒரு தாய்வயிற்றுப் பேற்றுத் தொகுதி; அத்தொகுதியினர். 2. அவ் வழியதாகிய மரபுத்தொகுதி 3. உற்றம் 4. சுற்றம் 5. குலம் 6. குழு, 7. கூட்டம் 8. அமைச்சர்கூட்டம் 9. துணையாகச் சேருங்கூட்டம். 10. நிரை 11. தொகுதிவகை 12. ஒப்பு 13. சார்பு. 14. வகை.

புறந்தருதல், பிறப்பித்தல், தோற்றுவித்தல், குழுவாயிருத்தல், வகையாயிருத்தல் முதலிய கருத்துக்களில் பல்வேறு விரிவாக்கங்கள் பெற்றுச் செழித்துப் பல்கிய தமிழீன்றனவாகிய ஈன் - ஈனு - (இனம்) முதலிய சொல்லமைவுகள் - மேலையாரிய மொழிகளில் படிவும் பதிவுமெய்தியிருக்கும் படிமங்களில் சில:-

ஈன் > (Latin) geno; gen.
(Greek) genos

[ஒ.நோ: யாமம் > ஜாமம். அடி > (யதி) > ஜதி (jati)
அகம் > (யகம்) jaga, jagat யாழ்ப்பாணம் > jaffna]

ஈன் > (Greek) gen = 1. be born 2. produce
genes = born > (French) gene.
gen > genane = 1 to beget (பிறப்பி, தோற்றுவி, பெறு, பெற்றெடு)
2. to produce.
(gen): 1. oxygene > oxygen. Nitrogene > Nitrogen.
(De Morveau and Lavoisier - 1787)
Endogene > endogen exogene) exogen
(De Candolle (1873)

2. gen > (English) Genesis = origen,
mode of formation or generation.

(Gk) genos = race (இனம்)
> (English genocide = intentional extermination of a race = இனக்கொலை

(Latin) gens = a clan, a breed or species of offspring; deseendant. genus = birth, deseent, origin, stock, offspring, descendant, collectively deseendants, race, kind, sort.

(Greek) genea = race (GK) Geneologia > (English) Genealogy. (Latin) gen > (English) gene = unit of heredity in chromosome controlling a particular inherited characteristic of an individual.

(End) genetics = study of heredity and variation in animals and plants

(Latin) genero = to beget, produce, crexte, cxuse to exist, bring to life.

genitor = a begether, father
genitrix = one who brings forth or bears, mother

(Latin) genitalis (English) genitals = external organs of reproduction
(Latin) generare > (English) generate = bring in to existence, produce.

(Eng) generation = procreation, propogation of speties, begetting.

(Latin) gen > (English) gens = group of families with supposed common origin.

(Latin) general is > (old french) > (Middle English) general = completely or almost universal.

(Latin) gens > gentis = family. gentis > gentilis > (English) gentle = of birth, family, pursuits etc) honourable, well born of a good family.

(English) gent = shortening of gentleman.

(Latin) Gens > (Roman) Gens = clan; number of families united by a common name.

(English) Gentry = gentle birth.

(Latin) Genus > genuinus > (English) genuine - native.

(Lation Genus > (Roman) genero > (old French) gendre > (English) gender = kind, sort, grammatical classification or one of the classes) of objects roughly corresponding to two sexes and sexlessness.

(French) genre > (English) genre: kind, style.

கிரேக்க நாட்டொடு தொடர்புடைய நாடோடியரான கீழையாரியர் சிலகாலம் ஆக்சசு ஆற்றுப்பள்ளத்தாக்கில்

வதிந்துவந்தனர். அவர்களில் ஒருதிரளார் அங்கிருந்து பிழைப்புத்தேடிப் புறப்பட்டுக் காந்தாரநாட்டு வழியாக நம் நாவலந்தீவினுட் புகுந்து - இங்கிருந்த சிந்துவெளிப்பரப்பின் வளமையில் வயப்பட்டு, கவர்ப்புண்டு தத்தம் கால்நடைகளுடன் கரையகரப் பகுதிகளில் கால்கொள்ளத் தொடங்கினர். அவர்கள் பேசிவந்த தம் நாடோடி மொழியிலும் நம் செந்தமிழீன்ற ''ஈன்'' என்னும் சொல்லின் திரிபான **''gen''**-உம் அதற்குரிய இடைச்சொற்கள் பலவும் பதிவுற்றிருந்தன.

gen என்றவாறில்லாமல் - சற்றே திரிந்த **djan** என்னும் உருவொலியில் அப்போது வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். அவ்வகையிலான இனச்சொற்கள்: ஜனஸ் = பிறப்பு, இனம் (இருக்குமறை), ஜன்மன் = பிறப்பு. (இ.ம.) ஜந்து = உயிரி, மாந்தன் (இ.ம.) ஜன்ய = உருவாக்கப் பெற்றவராகிய மக்கள், மக்கள். ஜனனம் = பிறப்பு. ஜனித்ர = தோற்றமூலம்; பிறப்பிடம். ஜனித்ரி = தாய் ஜனனி = தாய். ஜன் = பிற; முதலியன.

நாவலந்தீவு முழுமையுமாகத் தமிழ்மொழியே வட்டார வழக்கிற் பல்வேறு மொழிகளாகத் திரிபுற்று வழங்கியபோது - அவற்றிலிருந்தெல்லாம் வேண்டியமட்டும் எடுத்தெடுத்துப் புதுப்புது வடிவங்களில் தம் நாடோடி மொழிக்கண் பதிவு செய்யலாயினர். தம் மொழியை விரிவுபடுத்தும் முயற்சியில்தான் **djan (jan)** என்ற தம்மின் திரிபு வேரினின்று **jaa** என்றவாறு ஒரு புதுவேரைப் புதுக்கிக்கொண்டனர்.

அப்படி அவர்கள் திரித்தாக்கி வெளிப்படுத்திய கொடுஞ்சொற்களில் ஒன்றே, 'ஜாதி' என்பது! தொழிற்குலங்களாகப் பாகுபட்டிருந்த தமிழினம், பிறப்பு அடிப்படையிலென்னும் வக்கமுறைக்குத் (வர்க்கமுறைக்கு) தள்ளப்பட்டு வண்ண வொழுக்கமென்னும் (வர்ணாசிரமம்) வன்வலைக்குள் பிணிக்கப்பெற்று நெடிது நெளிந்தவாறு விரைவுறப் பிரிவெய்திப் புய்ந்து குலப்பிரிவினையாற் கூறுகூறாகி - வேறுவேறாகி - மாறுமாறாகி இன்று மாற்றாரிடம் மண்டியிட்டவாறு மலங்கிக் கலங்குகின்றது!

இவர்கள் இம் மண்ணுக்குள் நுழையும் முன்னீடாக மிகப்பல நூற்றாண்டுகளாக - இங்கும் ''சாதி'' இருந்தது. அச் 'சாதி', - கூட்டம், வகை என்றவாறான பொதுப்பொருள்களில் மட்டும் பயன்படுத்தப்பெற்ற தூய செந்தமிழ்ச்சொல்.

இச் சாதியை ''ஜாதி'' என்ற வடிவில் பலுக்கி நேர்செய்துகொண்ட ஆரியர் - தம் 'காத்யாயண சுரௌத சூத்திரம்' என்று நூலுள் - 'வகை' என்னும் தமிழியப் பொருளிலேயே பதிவித்துள்ளமை இங்குக் கருதத்தக்கதொன்றாகும்.

சாதி என்னும் இம் மண்ணுக்குரிய சொல்லுக்கு இணையாகப் - பிறப்படிப்படையிலான குலப்பிரிவு என்னும் பொருட்பாட்டில் 'ஜாதி' என்ற சொல்லை ஆரியர் உருவாக்கி முதன்முதலில் பதிவித்துப் பரப்பியது - மனு தரும சூத்திர வழியாகவே! இதற்கும் முன்னீடாக 'அய்த்தரிய பிராமணம்' என்னும் நூலில் - 'பிறப்பு' என்னும் பொருட்பாட்டில் மட்டுமே பதிவுசெய்து காத்திருந்துள்ளனர்!

மடப்பேதையான ஏமிலித் தமிழன் அச் சூழ்ச்சிகளுக்கும் கரவுகளுக்கும் ஆட்பட்டு, ஜாதியையே - பிறப்படிப்படையிலானது என்னும் பொருள்படச் 'சாதி' என்றவாறு தமிழிய வடிவில் ஏற்றுக்கொண்டு - தொடர்ந்து நார்நாராகக் கிழிந்து நாறிக் கிடக்கின்றான்! ஜாதிச் சாய்க்கடையில் இன்று புழுக்களாக நெளியும் நாம் - நம் மொழியில் வளர்ந்திருந்த 'சாதி' என்னும் சொல் தோன்றிய முறைமையை அறியவேண்டாவா?.. அது, அடுத்த இதழில்!...

சில வல்லாளுமைத் தமிழத்தாலும் வீழ்கிறோம்!

'திராவிடத்தால் வீழ்ந்தோம்' என்ற 'வெங்காலூர் குணா' வின் நூல் பெரியாரின் திராவிடக் கருத்தையும் திறனாய்வு செய்யும் ஒரு கருத்துரை நூல். இதில் மறுப்பு ஏற்புகள் வரலாம். தென்மொழிக்கும் இந்நூலில் மறுப்பு ஏற்புகள் உண்டு. அந்நூலில் உள்ள புதிய பல செய்திகள் பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. அதோடு அரசியல் இயக்கங்கள், அரசியல் சாராப் பகுத்தறிவு இயக்கங்களில் உள்ள தமிழல்லாப் பிறமொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களை மிகவும் தூண்டச் செய்திருக்கிறது. அண்மையில் நடைபெற்ற தமிழ்ச் சான்றோர் பெருவிழாவில் நடந்த நிகழ்ச்சி இன்னும் அதிர்ச்சியூட்ட வல்லதாக உள்ளது.

நிகழ்ச்சியின் போது இந்நூலின் வெளியீட்டு விற்பனையாளர் சற்றும் எதிர்பாராவண்ணம் பத்துப் பதினைந்து அரம்பர்கள் சூழத் தாக்கப்பட்டிருக்கிறார். பெரியார்க்கு மாறான நூலை விற்பனை செய்வதாகக் கூறித் தாக்குதல் நடைபெற்றிருக்கிற நேரத்தில் 'அர்த்தமுள்ள இந்து மதம்' போன்ற நூல்கள் மண்டபத்துள் விற்பனைக்குக் கிடந்தன.

பெரியார் திறனாய்வுக்கு அப்பாற்பட்டவரா? அப்படியேதேனும் சிக்கல் இருக்குமாயின் 'இந்நூலை விற்கக்கூடாது' என்று அறிவித்தும் தவிர்த்து இருக்கலாம். இதுபோல் செயல்பட்டிருப்பது எவ்வகையானும் சான்றாண்மையாகாது.

பாவலரேறு பொதுமையர்

– குணா

பொதுமை உணர்வு, மாந்த ஓர்மை உணர்வு, உலகில் ஏற்ற இறக்கங்களும் சுரண்டல்களும் பெருத்து மக்களை அடக்கியும் ஒடுக்கியும் வாழ்வதே நெறி என்னும் ஆண்டைக் கருத்தியலுக்கு எதிரான மாந்தநேயமே பொதுமை ஓர்மை. உழைப்புச் சுரண்டல் வழியில் குமுக மீத்தம் (Social Surplus) சிலரால் தன்வயமாக்கிக் கொள்ளப்பட, ஆட்சியும் கொற்றமும் ஏடாகூடமானபோது அப் பொதுமை ஓர்மை ஓர் எதிர்மறையாக அரும்பியது. ஆயினும், பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் முளைத்த முதலாளிய வாழ்க்கைத்திணைக்குள் அதன் எதிரோட்டமாகவே அப் பொதுமைக் கருத்தியல் செவ்விய அரசியல் கொள்கையானது என்பதும் வரலாறு.

பேய் (அணங்கு), விலங்கு, கள்வன் ஆகியவற்றுடன் அரசனையும் நான்காவதாகச் சேர்த்து அரசனும் அஞ்சத்தக்கவன் என்றுரைக்கும் தொல்காப்பியத்திலேயே 'அரசு' என்பது அச்சத்திற்குரியதெனச் சொல்லப்பட்டது. கேடு தர வல்லோன் என்னும் பொருளியல்'அரையன்' என்னும் தமிழ்ச்சொல்லே 'அரசன்' என்னும் சொல்லான சொல்லியல் வரலாறும் அதை மெய்ப்பிக்கும். ஆயினும் ஆளவந்தோரோ ஆண்டைகளோ ஆளப்படும் மக்களை அடக்கியாளப் பயன்படும் வன்முறைக் கருவியே **அரசு** என்னும் பாடம், பொதுவுடைமைக் கருத்தியல் உருவெடுத்த பின்னரே விளங்கியது. இந்தப் பின்புலத்தில், பாவலரேறு ஒரு பொதுமையராக நிற்கும் அமைதியைப் பார்க்க வேண்டும்.

இரண்டாம் உலகப் போர் மூளவிருந்த சூழலில் பிறந்தவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள். அவருடைய இளமை நாட்களில் இரண்டாம் உலகப் போர் நடந்து முடிந்து, உலகமே பெரிய மாற்றங்களுக்கு ஆளானது. பின்னர், உருசியாவின் தலைமையிலான ஒப்புரவு உலகம் என்றும், அமெரிக்காவின் தலைமையிலான முதலாளிய உலகம் என்றும் உலகம் இரு கூறாகிய நிலையில் நடந்து வந்த கருத்தியல் பனிப்போர் என்பதுகள் வரையில் தொடர்ந்தது. இத்தகைய உலகச் சூழலில், சோவியத் பேரரசின் வெளிநாட்டுக் கொள்கையின் நீட்சியாகவும், அடுத்துவந்த சீனப் பொதுவுடைமைக் கட்சியின் வெளியுறவுக் கொள்கையின் நீட்டிப்பாகவும், அவற்றின்

** தென்மொழி அவைபத்தின் சார்பில் மதுரையில் தி.பி.2026..... கன்னி – 14, (1–10–95) அன்று நடைபெற்ற பாவலரேறு சிறப்பியல் கருத்தரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரை.*

வால்பிடிப்பாகவும், வறட்டிமாகவுமே பொதுவுடைமைக் கொள்கை தமிழகத்தில்

கடை விரித்திருந்தது. தமிழகப் பொதுமையரின் வறட்டியம், தமிழகப் பொதுமையரின், 'பாரத' ஓர்மை என்னும் புதிய பார்ப்பனியப் பொறிக்குள் கட்டுண்ட நிலையில், ஆரியப் பார்ப்பனியத்தின் எடுபிடியாகவே வலம் வந்தது. தமிழக வாழ்வியலில் தோன்றிய திராவிடக் கருத்தியலும் நச்சுமரமாய் வளர்ந்தது. புதிய பார்ப்பனியத்தின் உருமறைப்பாகிய இந்தி-இந்தி(ய)க் கருத்தியல் இந்தி(ய)ப் பேராயக் கட்சியின் ஆட்சி வழியில் 1967 வரையில் தமிழகத்தில் கொலுவிருந்தது.

உலக அரங்கில், சோவியத் ஆட்சி ஒரு வல்லரசாகக் கெட்டழிந்தது. அதன் கொடும்பிடிக்குள்ளிருந்து விடுபடத் தொடங்கிய கீழை ஐரோப்பிய நாடுகளில் முதலாளியம் மீளவே, சோவியத் ஒன்றியம் குலைந்து சிதறியது. உருசியப் பேரரசுக்குள்ளேயே தேசிய இனங்களின் கலகங்கள் வெடித்தன. இந்தி(ய) வல்லரசுக்குள் கட்டுண்ட பல தேசிய இனங்கள் விடுதலையை நாடின. இலங்கைத் தீவில், சிங்கள இனவெறி தறிகெட்டுப் போனது; அதனால், தமிழீழ விடுதலைப் போர் மூண்டது.

முன்னர் பர்மாவில் நேர்ந்ததைப் போன்றே, மராட்டியத்திலும் கருநாடகத்திலும் தமிழர்களின் மீது பச்சை வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. அண்மையில், பச்சைப் பார்ப்பனிய மீட்சிக் கருத்தியலே இந்து வெறி அரசியலாகத் தமிழகத்திற்குள் மெல்லப் புகுந்திட, மார்வாடிகளின் பணமும் பார்ப்பனர் தெலுங்கர் அணிவகுப்புகளும் முழு மூச்சாகச் சூழ்ச்சி செய்துவரும் கேடும் பெருகி வருகின்றது. சென்ற அறுபதாண்டு காலமாக உலகளவிலும் தமிழக அளவிலும் நேர்ந்த இத்தகைய நிகழ்வுகள், பெருஞ்சித்திரனார் ஓர்மையின்மீது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின. வாழ்வியல் சூழல்தானே கருத்தியலை உருவாக்குகின்றது,

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் அரசியல் வாழ்வில் தமிழ்மொழி உணர்வும் தமிழ்க் காப்புணர்வும் தமிழின உணர்வுமே தொடக்க நிலையாக அமைந்திருந்ததை 1959-ஆம் ஆண்டில் வெளிவரத் தொடங்கிய **தென்மொழி** காட்டுகின்றது. அவருடைய பொதுமை ஓர்மை அந்நிலையில் வறட்டிய வாய்பாடுகளாக இல்லை. அவர்தம் பொதுமை ஓர்மை இயற்கை வழிபட்டது.

"நீர்பொது; நிலம்பொது; நெடுவான் வெளிபொது;
ஞாயிறும் நிலவதும் பொதுவே;

ஊர்பொது; உயிர்பொது; உயிருடற் காகிடும்
உணவெனும் பல்வகை பொதுவே!

ஏர்பொது; இவற்றின் எவ்வகை விரிவும்
எல்லவர்க் கும், பொது பொதுவே;

பார்பொது; சீர்பொது; பல்வகைப் பொருள்பொது;
பகுத்தலும் வகுத்தலும் ஏனோ?"[2]

என்னும் பாடல் அதற்குச் சான்று கூறும். இத்தகைய இயற்கை ஓர்மையும் உளநுட்பமும் தமிழகப் பொதுவுடைமையருக்கே இயல்பான வறட்டியத்திலிருந்து வேறுபடும்.

"இவ்வுலகம் கூறும் 'பொதுமை' எனுங்கருத்தோ
செவ்வகையாய் அன்றே தமிழர் செறித்ததுதான்;
அற்றைத் தமிழ்நூல் அறியார் புதிதென்பார்;
இற்றைக் குலகரசே ஏற்றதெனச் சொன்னாலும்
அன்ன நிலையை உலகம் அடைதற்கு
முன்னருயர் தன்மை முளைக்கும் நிலைவேண்டும்!
அந்நிலைக்கோ உள்ளம் அறிவோ டிணைந்துயர்ந்து,
செந்நிலையைப் பற்றிச் செருக்குநிலை தாமழிந்து,
பற்றற்று நின்று பரந்துயரப் பாரின்கண்
உற்ற உயிரெல்லாம் ஒன்றென் றுணர்வுபெறல்
வேண்டும்! அதற்கிந்த நீணிலத்தின் சான்றோர்கள்
தூண்டும் வழியில் துவளா தெழல்வேண்டும்
அந்த நிலைக்கே அடிநிலையிங் கேதென்றால்
சொந்த நிலத்தடிமை முன்னர் தொலைப்பதுவே!
சொந்தநிலம் என்ப தெதுவென்னில் சொல்பவற்றை
அந்த மொழியில் அறிவார்முன் வாழ்ந்தநிலம்!
இங்ஙன் மொழிவழியே இவ்வுலகம் நின்றிடிலோ
எங்ஙன் 'உலகரசென்' றிங்கியம்பல் சாலுமெனின்,
தம்நலத்தைக் காப்பார் பிறர்நலமும் தாங்காப்பார்!
தம்நலத்தைக் காவார் பிறர்நலத்தைக் காப்பமென்றல்
கண்ணறையன் கண்ணறைக்கு காட்டுவது போலாகும்.[3]

சொந்த மண்ணையே தொலைத்துவிட்டு, அடிமையாய் மிடிமையில் கெட்டுச் சீரழிந்து போக-- நாடோடியாய் பஞ்சையாய்த் தன்மானம் இழந்துநின்ற தமிழனிடம்-- தமிழகப் பொதுமையர் போய் உலகரசைப் பற்றிப் பேசிய அவலத்தையே பெருஞ்சித்திரனார் அவர்கள் இங்குச் சுட்டினார்.

(தொடரும்)

வினையின் ஆளுகை

- மா. பூங்குன்றன் க.மு.,மெய்.மு.
ஆய்வாளர், சென்னைப் பல்கலைக்கழகம்

தன் பரப்பில் இருக்கும் அனைத்தையும் தன் ஏந்துக்குத் தக மாற்றியமைத்துக்கொள்வது என்பதுதான் ஆளுதல் என்று பொருள்.

இங்கு வினையென்ற சொற்கூறு தன் பரப்பாகிய சொல் முதல் சொற்றொடர் வரை எவ்வாறு ஆளுகை செலுத்துகிறது என்பது பார்க்கப்படுகிறது.

இந்நோக்கில் பழைய இலக்கணக்காரர்கள் இதைப் பார்த்திருப்பினும் மொழியியல் பார்வையில் மேலும் சில செய்திகள் நமக்குப் பயனுள்ளனவாக இருக்கின்றன.

பொதுவாக வினை வேற்றுமைகொள்ளாது, காலம் காட்டும் என்ற நிலையில் இருந்தது. அதன்பின் நன்னூலார் வினை ஆறு தரவுகளைத் தருவதாகக் கூறுவார்.

அத்தரவுகள் செய்பவன், கருவி, இடம், செயல், காலம், செய்பொருள் என்பனவாகும்.

அதற்குக் கூறும் உரையில் எடுத்துக்காட்டாக 'வனைந்தான்' என்ற வினைமுற்றினை எடுத்துக்கொண்டு,

> ''வனைந்தான் என்புழிக் குயவனாகிய செய்பவனும்
> மண்ணாகிய முதற்காரணமும், தண்டசக்கரம் முதலிய
> துணைக் காரணமும், வனைதற் கடிப்படையான
> இடமும், வனைதற்கு முதற்காரணமாகிய செயலும்
> இறந்த காலமும், குடம் முதலிய செயப்படுபொருளும்
> தோன்றும்''

என்பர்.

'வனைந்தான்' என்ற சொல்லை எடுத்துக்கொண்டால், வனை-தல் என்ற வினையும், இறந்த காலமும், படர்க்கை ஆண்பால் ஒருமை ஈறும் ஆகியவற்றை மட்டுமே அவ் வினைமுற்றுச் சொல் உள்ளடக்கி உள்ளது. இம் மூன்றை மட்டுமே தரவுகள் எனக்கூறலாம்.

தவிர மற்றவற்றைத் தரவுகள் எனக் கூறமுடியுமா? ஆனால் செய்பவனாகிய குயவனும், மண் என்ற முதற்காரணமும், தண்டசக்கரம் முதலிய துணைக் காரணமும், வனைதற்கான இடமும்,

குடம் முதலிய செயப்படுபொருளும் அச்சொற்றொடரில் இடம்பெற வினைச்சொல் களம் அமைக்கிறது. அக்களத்தில் எந்த மாறான சொல்லும் இடம் பெறாமல் கட்டுப்படுத்தி ஆளுமை செய்கிறது.

★ (எ.கா) வண்ணான் தூண்டில் கொண்டு கட்டிலை வனைந்தான்.

ஒரு சொற்றொடரில் எழுவாய், செயப்படுபொருள் போன்று எத்தனைப் பெயர்ச் சொற்கள் இடம் பெற வேண்டும் என்பதை நிறுவும் கூறாக வினைச் சொற்கள்தாம் இயங்குகின்றன.

நட-த்தல் என்ற வினை ஒரேயொரு பெயர்ச்சொல்லை (எழுவாய்) மட்டும் சொற்றொடரில் இடம்பெற அனுமதிக்கும்.

படி-த்தல் என்ற வினை இரண்டு பெயர்ச்சொற்களை (எழுவாய், செயப்படுபொருள்)ச் சொற்றொடரில் இடம் பெற அனுமதிக்கும்.

செயப்படுபொருளைக் காட்டும் வினை, காட்டாத வினையென வினையை இரு வகைகளாகப் பிரிப்பர்.

1. செயப்படுபொருள் குன்றிய வினை
2. செயப்படுபொருள் குன்றா வினை

செயப்படுபொருள் குன்றா வினைகளில் செயப்படுபொருள் நீக்கி வழங்கினாலும் பொருள் மாறாது, பொருள் மாறும் என இரு வகைகளாகப் பிரிக்க முடியும்.

1. கண்ணா! **செய்தித்தாள்** பார்த்தாயா?
2. கண்ணா! **உணவு** சாப்பிட்டாயிற்றா?

பார்-த்தல், சாப்பிடல் ஆகிய இரு செயப்படு பொருளை குன்றா வினைகளில், 'கண்ணா சாப்பிட்டாயிற்றா?' என்று வழங்கினாலும் பொருள் முழுமை பெறும். அதே நேரத்தில் செய்தித்தாள் என்பதை நீக்கி, 'கண்ணா! பார்த்தாயா?' என்று கேட்டால் பொருள் முழுமை பெறாது.

ஒவ்வொரு வினையும் குறிப்பிட்ட எழுவாயை மட்டுமே எடுத்துக்கொள்கிறது. படி-த்தல் என்ற வினையில் எழுவாய் ஒரு மாந்தனாகத்தான் இருக்கமுடியும்.

★ மாடு படித்தது
★ மரம் படித்தது

என்ற தொடரிலக்கணப் பிழையற்ற தொடர்கள் பொருள் பிழையாக இருப்பதால் தொடராக அமையமுடியாது.

இதை நீக்கவேண்டித் திணை, எண், பால் பாகுபாடுகளுடன் பெயர்ச்சொற்களில் இன்னும் சில துணைப்பாகுபாடுகளை மொழியியலார் அமைத்துள்ளனர்.

ஒரு தொடரில் இடம் பெறும் இரு பெயர்ச்சொற்கள் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை இத் துணைப்பாகுபாடுகளுடன் வினைதான் முடிவு செய்யும். இதில் மாற்றம் ஏற்படும்போது தவறுகள் நேரும்.

1. பூனையை நாய் துரத்திற்று
★ பூனையைப் பொத்தகம் துரத்திற்று
(விலங்கு-விலங்கற்றது மாற்றம்)

2. சிறுவன் பொத்தகத்தைப் படித்தான்
★ நாய் பொத்தகத்தைப் படித்தது
(விலங்கு - மாந்தன் மாற்றம்)

3. சிறுவன் பாம்பைக் கண்டு அலறினான்
★ குருடன் பாம்பைக் கண்டு அலறினான்
(கருத்துத் தவறு)

4. சிறுவன் நான்கு பழம் சாப்பிட்டான்.
★ சிறுவன் நான்கு தண்ணீர் குடித்தான்.
(எண்ணக்கூடியது மாற்றம்)

5. அவன் காட்டிய பழம் மஞ்சள்நிறம்
★ அவன் காட்டிய அன்பு மஞ்சள்நிறம்
(நுண்பொருள் மாற்றம்)

மேற்கண்ட தொடர்கள் தொடர் அமைப்பில் பிழையில்லாமல் இருப்பினும் பொருளமைப்பில் பிழைத் தொடர்களை ஏற்படுத்தியுள்ளன.

இவ்வகைப் பிழைகள் அனைத்து மொழிகளுக்கும் பொதுவானவையானாலும் தமிழுக்குள்ள சிறப்பு வரையறைகளில் ஒன்று-திணை எண் பால் ஈறு அமைவு. அவ்வரையறைகள் மாறினாலும் தவறு ஏற்படும்.

★ (எ.கா) அவள் வந்தான்

இவ்விடத்தில் பெயரில் தோன்றும் பாலறிகிளவியில் ஏற்பட்ட சில மாற்றங்களையும் குறிப்பிடலாம்.

இவ் ஈறுகள் பிற்காலத்தில் மாற்றம் பெற்று உள்ளன. பலர்பால் ஈறுகள் மதிப்பு, உயர்வு குறித்துத் தனி ஆண், பெண் பாலுக்கும் பயன்படுத்தப்பெற்றன.

ஆங்கிலத்தை எடுத்துக்கொள்வோமானால் அதில் மதிப்புக் குறித்துப் பெயரிலும் வினையிலும் எந்த மாற்றமும் இல்லை. He comes என்று கூறுவோமானால் தந்தை மகன் இருவருக்கும் அதுவே பொருந்தும். சிறப்புப் பெயருக்கு முன் Mister என்ற முன்னொட்டு மட்டுமே உண்டு. தமிழில் 'திரு' என்ற அடைசேர்க்கப்படுகிறது. 'திரு' என்ற சொல் திரள், திரட்சி என்ற பொருளடிப்படையில் வந்திருக்கவேண்டும்.

தனி மாந்தனைப் பன்மைப்படுத்துதலையே மதிப்பும் உயர்வும் கொடுத்ததாகப் பயன்படுத்தத் தொடங்கினர். இடைக்காலத்தில் தனிமாந்தன் எனினும் எளிதில் எடைபோட முடியாத அளவில் உயர்ந்தவன் என்ற பொருளில் 'கனம்' என்ற சொல்லைப் பெயருக்கு முன் பயன்படுத்துவதை மதிப்பாகக் கருதினர்.

(எ.கா.) கனம். காமராசர் அவர்கள்.

எனவே மதிப்பும் உயர்வும் குறித்து,

அவன்	**அவர்**	ஆனது
அவர்	—	பன்மை வழக்கிலிருந்து தவிர்ந்தது
அவர்கள்	—	என்னும் இருமடிப்பன்மை வழக்கத்தில் வந்தது.

அதன்பின் **அவர்கள்** பன்மை விகுதியாகவும், உயர்வு விகுதியாகவும் இருவகையில் இயங்கத் தொடங்கியது.

சிறப்புப் பெயருக்குப் பின்னிருந்த 'னகர' ஈறு சிறப்புப்பெற்று 'ரகர' ஈறாகவும் 'ஆர்' அடைசேர்வதாகவும் ஆனது
(எ.கா) கம்பன் - கம்பர்
அன்பழகன் - அன்பழகனார்

ஆங்கிலத்தில் His Excellency என்று His என்ற உடைமைச் சொல் வருவது போலவே **அவர்கள்** என்ற சுட்டுச்சொல்லும் மதிப்புச்சொல்லாகப் பெயருக்குப் பின்தொடர்ந்தது.

(எ.கா) மாறன் அவர்கள்

இவற்றிற்குத்தகத் தொடரில் வினைமுற்று விகுதியிலும் மரபிற்கொத்து 'கள்' பன்மைவிகுதி பின்பற்றப் பெற்றுள்ளது.

(எ.கா) தமிழக மக்கள் விடுதலைக்காகவே
பாவலரேறு அவர்கள் வாழ்ந்தார்கள்.

தமிழ்க்குன்றம் சாய்ந்தது !

தனித்தமிழ் காக்கவும், தனித்தமிழ் நாட்டுக்கும் போராடியவர். அதற்காகப் பன்முறை சிறை சென்று அரசுப் பணியை இழந்தவர். தொடர்ந்து போராடிவந்த இவர் பாவாணரின் மாணவர். பெருஞ்சித்திரனார் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர். இதனால் அவரும், அவர் மகனும் 'தடா' சட்டப்படி தளை செய்யப்படு அண்மையில் தான் விடுதலையானார்கள்.

- 'இராணி' (கிழமை இதழ்)

பெருமைமிக்க (பிரபல) தமிழறிஞர்களுள் ஒருவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார். தமிழீழம், தனித்தமிழ்நாடு போன்றவற்றை வெளிப்படையாக ஆதரித்துப் பேசியதால் ஆட்சியாளர்களின் சினத்துக்கு அடிக்கடி ஆளானவர். 'மிசா' 'தடா' எனும் பல்வேறு அடக்கு முறையினால் சிறைபிடித்த... காரணமே இல்லாமல் ஒரு தமிழறிஞரை சிறை வைத்தது தவறு என்று தீர்ப்புக் கூறப்பட்டதால் விடுதலை செய்யப்பட்டார். **- 'சூனியர் விகடன்.'**

பெருஞ்சித்திரனாரிடம் செல்வங்கள் ஏதுமில்லை, தமிழைத்தவிர. அவர் இறுதி ஊர்வலத்தில் தியாகராய நகரில் தென்மேற்குப் போக்கு சாலை நிரம்பி வழிந்தது. அவர் இருந்தது வாடகை வீட்டில். நம் தெருவில் இயல்பாய்ப் போய் வந்து கொண்டிருக்கும் அவருக்கா இவ்வளவு மக்கள் என அண்டை வீட்டுக்காரர்கள் வியக்கின்றனர். தம் மக்களுக்குப் பல்வேறு சாதிகளில் திருமணம் செய்து வைத்தார் இவர். அவரது அச்சகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் கூட ''எங்களுக்கு வேலை எங்கேயும் கிடைக்கும். அவரைப் போல் மாந்தர் (மனிதர்) வேறு யார் கிடைப்பார்'' என்று கலங்குகின்றனர். **- சூனியர் போசுட்டு.**

ஈராயிரம் ஆண்டாய் எண்ணித் தவங்கிடந்து எந்தமிழ்த்தாய் ஈன்ற ஈடற்ற பிள்ளைதாம் எங்கள் பாவலரேறு.

இவர் தோன்றியதால் தமிழினத்தின் மாண்ட வரலாறு புதுப்பிக்கப் பெற்றுவிட்டது.

''தம்மனை நினையான்; தமிழ் நினைந்திருந்தான்'' என்றே பாவேந்தரைப் பாடினார் பாவலரேறு. உள்ளபடியே அவ்வரிகள் பாவலரேறு அவர்களுக்கே மிகவும் பொருந்தும்.

மொழி இனம் நாடு என்ற முப்படிகளின் விடுதலையே நோக்கம் எனக்கொண்டு வாழ்ந்த பாவலரேறு பட்ட சிறைக் கொடுமைகளைப்

போலத் தமிழின வரலாற்றிலே இதுவரை எந்தப் புலவனும், அறிஞனும் பட்டதில்லை. கொண்ட கொள்கைக்காகத் தன்னையும் தன் குடும்பத்தையும் ஒப்புக் கொடுத்த புலவன் இவருக்கு முன்னும் இல்லை; பின்னும் தேவைபடப் போவதில்லை.... ஈராயிரம் ஆண்டுக்கால அடிமைத் தமிழினத்தின் மீட்பராகத் தம்மை ஒப்புக் கொடுத்தார் பாவலரேறு.

அரசுகள், இவர் எழுத்தின் சூட்டைத் தாங்கிக் கொள்ள முடியாமல் இவரைச் சிறையில் தள்ளித் தம் உண்மை உருவங்களைக் காட்டிக் கொண்டன.

எதிர்காலத் தமிழகம் அவர்க்குச் சிறந்த நினைவு இல்லமாக அமையவிருக்கிறது. ஐயா பாவலரேறு அவர்கள் புதைக்கப்படவில்லை. விதைக்கப் பெற்றிருக்கிறார். அவ்விதை விரைவில் மொழி, இன நாட்டு உரிமை மலர்களை உலகெங்கும் பரப்ப விருக்கின்றது. - 'திராவிடன்'

தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர், பாவேந்தர் போன்ற பெரியோர்கள் ஊட்டிய தனித்தமிழ் விழப்புணர்வை, மாபெரும் இயக்கமாக நடத்திக்காட்டிய புரட்சியாளர்!

இதுவரை, எத்தனையோ இடர்களுக்கு ஆட்பட்டும், தமிழர்களுக்கு நல்வழி காட்டும் 'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு', 'தமிழ்நிலம்' போன்ற தனித்தமிழ் இதழ்களைத் துணிச்சலாய், தன்னந்தனியராய் நின்று நடத்திக் காட்டியவர்.

தமிழ்மொழிக்கும், இனத்திற்கும் தளராது தொண்டு செய்த அந்தத் தமிழ்த் தூண் இன்று சரிந்துள்ளது. - **இதயம் பேசுகிறது.**

தனித்தமிழ் இயக்கத் தளபதியாக விளங்கி வந்த தமிழறிஞர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்... தன்னிகரற்ற மெய்யுணர்வாளர். உள்ளத்தாலும் உணர்வாலும் வயிரமேறிய தமிழ்க் குன்றம். பெருஞ்சித்திரனாரின் மறைவு தமிழ்க் குமுகாயத்திற்குப் பேரிழப்பாகும். **- சேல்சு மார்க்கெட்டிங் பப்ளிசிட்டி**

ஆரியம் வேறு தமிழம் வேறு என்றும், இந்தியத் தேசியம் வேறு, திராவிடத் தேசியம் வேறு, தமிழ்த் தேசியம் வேறு என்றும், மும்மொழிக் கொள்கை மோசடிக் கொள்கை, அது இந்தியத் தேசியக் கொள்கை; இருமொழிக் கொள்கை ஏமாற்றுக் கொள்கை, அது திராவிடக் கொள்கை. ஒரு மொழிக் கொள்கை உரிமைக் கொள்கை என்றும் நிறுவியவர் பாவலரேறு அவர்கள்.

பாவலரேறு கண்டது தமிழ்த் தேசியமே. அதற்காகத் தம் வாழ்நாளெல்லாம் அயராது பாடுபட்டார். அவர் உயர்த்திப் பிடித்தத் தமிழ்த் தேசியத்தை நாமும் உயர்த்திப் பிடிப்போம்! ஓங்குக பாவலரேறு புகழ்!

- மக்கள் முரசு.

தமிழ் மொழியின் வளர்ச்சி, தமிழரின் நலம், தமிழ்நாட்டின் முன்னேற்றம் ஆகியவற்றிற்காக 40 ஆண்டுகளுக்கு மேல் தொண்டாற்றியவரும் 18 முறை சிறை சென்றவருமான பெரும்புலவர் பெருஞ்சித்திரனார் அவர்கள்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார், பொது வாழ்க்கைக்கு தமமையே ஈடுபடுத்திக்கொண்டவர். அரசு கொண்டு வந்த அனைத்துக் கறுப்புச் சட்டங்களிலும் பலமுறை தனிப்படுத்தப் பெற்றுச் சிறை ஏகியவர்.

தமிழக விடுதலை, ஈழ விடுதலை, தமிழ்மொழி விடுதலை, பார்ப்பன எதிர்ப்பு உட்படப் பல்வேறு போராட்டங்களுக்கும் குரல் கொடுத்தவர்.

- முன்னோடி

தென்மொழி நன்கொடை வரவுகள்

(1-7-95 முதல் 31-10-95 முடிய)

1.	அ. நக்கீரன்	–	சோளிங்கபுரம்	–	500.00
2.	மருத்துவர் கோவிந்தனார்	–	சென்னை–17	–	30.00
3.	செ.கு.வேள்	–	கன்னியாகுமரி	–	140.00
4.	த. அன்பழகன்	–	தூத்துக்குடி	–	200.00
5.	ந.வை. இளஞ்செழியன்	–	கருக்காடிப்பட்டி	–	100.00
6.	தமிழ்மாறன்	–	அப்பன்புரம்	–	100.00
7.	மா.செ. தமிழ்மணி	–	நெமலி	–	100.00
8.	அருள்மணி	–	வெங்காலூர்	–	400.00
9.	த. வையை நம்பி	–	நிலக்கோட்டை	–	100.00
10.	த. அன்பழகன்	–	தூத்துக்குடி	–	100.00
11.	தோழர். தமிழன்	–	மதுரை	–	100.00
12.	மருத்துவர் கோவிந்தனார்	–	சென்னை–17.	–	20.00
13.	மீ.சு. இளமுருகு பொற்செல்வி	–	குளித்தலை	–	100.00
14.	பாவலர் இன்குலாப்	–	சென்னை	–	300.00

பாவலரேறு நினைவேந்தல் நிகழ்ச்சிகள்

நம் ஐயா பாவலரேறு அவர்களுக்கு வீரவணக்க நிகழ்ச்சியாகவும், நினைவேந்தல் நிகழ்ச்சியாகவும் பல்வேறு பகுதிகளில் பல்வேறு அமைப்புகள் கூட்டங்கள் நடத்தின. அவற்றில் 'தென்மொழி'க்கு அனுப்பப் பெற்ற கூட்ட நிகழ்ச்சிச் செய்திகள் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்படுகின்றன. (சென்ற இதழ் தொடர்ச்சி)

கோபிப்பாளையம்: தூய திரேசாள் பள்ளி முன்னாள் மாணவர் இளைஞரணியினர் பாவலரேறு நினைவு ஏந்தல் கூட்டத்தினை 29.7.95 அன்று நடத்தினர். திரு. க. கனகராசு அவர்களின் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது. பாவலரேறு படத்தினைத் தென்மொழி நிலா வேங்கடவன் திறந்து வைத்தார். புலவர் தமிழ்மாறன் சிறப்புரையாற்றினார்.

அரக்கன் கோட்டை: தமிழியக்கச் சார்பில் பாவலரேறு நினைவு ஏந்தல் படத்திறப்பும் பொதுக்கூட்டமும் 28.7.95 அன்று நடைபெற்றது. திரு.ச.த.தமிழழகன் தலைமையில் பாவலரேறு படத்தினை முனைவர் கா. அரங்கசாமி அவர்கள் திறந்து வைத்தார். புலவர் தமிழ்மாறன் திரு கி.வே. பொன்னையன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

திருச்சி: ஆனந்தா விடுதியில் உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கச் சார்பில் 'தமிழா நம் கடமை என்ன?' எனும் கருத்தரங்கில் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் மறைவுக்கு 28.7.95 அன்று வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

அரும்பாக்கம்: பெருஞ்சித்திரனார் திடலில் தையற் கலைஞர் தமிழ்ப்பேரவை (சென்னை) சார்பில் 29.7.95 அன்று பாவலரேறு நினைவு ஏந்தல் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திரு க.ப. கிள்ளிவளவன் தலைமையில் திருவாளர்கள் அருகோ (எழுகதிர்), இளங்கோ (பு.இ.மு), த. சுந்தரராசன், இளஞ்சித்திரன், ந.இராமலிங்கம், க.ப. சின்னராசு, இரா.சேகர் மற்றும் பலர் உரையாற்றினர்.

பெரம்பலூர்: வெங்கடேசுவரா திருமண மண்டபத்தில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் பேரவை சார்பில் 30.7.95 அன்று ஐயா அவர்களின் புகழரங்கம் ஓவியர் சி.முகுந்தன் தலைமையிலும், ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கருத்தரங்கம் புலவர் தமிழரங்கன் தலைமையிலும் நடைபெற்றன. திருவாளர்கள் வே.ஆனைமுத்து, ப.அருளி, சேந்தமாங்குடியார், குறளன்பன், ஆனந்தராசு முதலியோர் உரையாற்றினர்